Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 1, No.2, 2020, (35-49)

# தமிழகத்தில் தேவரடியார் முறை

# Devaradiyar system in Tamil Nadu

**M. Kayalvizhy**

**Assistant Professor, Department of Tamil, Pachayyappas College for Women, Kancheepuram-631502, Tamil Nadu**

**kayalarul22@gmail.com**

**DOI:** https://doi.org/10.37134/jov.vol1.2.4.2020

Received: 30 August 2020; Accepted: 11 October 2020; Published: 19 October 2020

**Cite this article (APA):** Kayalvizhy, M. (2020). *தமிழகத்தில் தேவரடியார் முறை*. *Journal of Valartamil*, *1*(2), 35-49. https://doi.org/10.37134/jov.vol1.2.4.2020

***ஆய்வுச் சாரம்:*** *தேவரடியார் முறை இடைக்காலத் தமிழகத்தில் பரவலாகப் பின்பற்றப்பட்ட முறையாகும். இவ்வகையான மகளிர் சைவ, வைணவ ஆலயங்களில் இறைப்பணிக்காகத் தம்மை அர்ப்பணித்தவராவர். கோயில்களிலும் மடங்களிலும் சேவை செய்த தேவரடியார்களைப் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. அவர்கள் கலைகளின் இருப்பிடங்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் கோயில்களுக்குத் தம்மை அர்ப்பணிக்கும் நிகழ்வு "பொட்டுக் கட்டுதல்" என்று பெயர். அவர்களுக்குத் "தலைக் கோலி" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. தேவரடியார்கள் பல்வேறு தானங்களை வழங்கிச் சமூகத்தில் சிறப்புப் பெற்றனர். ஆனால் காலப்போக்கில் அவர்கள் வீழ்ச்சியைச் சந்தித்து "தேவதாசிகள்", "தாசிகள்" என்ற பெயரில் துயர வாழ்வு வாழ்ந்து மறைந்தனர்.*

***கருச்சொற்கள்:*** *கோயில்கள், கலைப் புரவலர்கள், பொட்டுக் கட்டுதல், தலைக் கோலி, தானங்கள், வீழ்ச்சி*

**Abstract:** *Devaradiyar* system was a practise which was followed during the mediaeval period of Tamil Nadu. They were the women whom dedicated their life for Siva and Vaishnava temples. Number of devaradiyars were served in the temples which was exposed by the inscriptions. They were skilled in art such like Dance, Music and Drama and developed it for centuries. Some women married and some other unmarried and they followed the practise "Pottu Kattuthal". The Tamil kings honoured them by giving the title of "Thalaikkoli". Devaradiyars gave huge donations to the temples and served for welfare of the society. They also availed more privileges at that time. But course of time due to various problems and downfalls they lost their honour and struggled for their livelihood. In course of time they were called as "Devadasis" and "Dasis". Raise and fall of Devaradiyar system has been considered as notable event in the social history of the Tamils.

**KeyWords:** Temples, Art, Pottu Kttuthal, Thalaikkoli, Donations, Downfall, Devadasis

***தமிழகத்தில் தேவரடியார் முறை***

***முன்னுரை***

*"மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்"*

*என்றார் பாரதி. அந்த அளவுக்கு அவர் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் பெண்கள் இழிவு படுத்தப்பட்டனர். இந்தப் புன்மையைக் கண்டுதான் மனம் பொறாமல் அவர் பொங்கி எழுந்தார். இன்று சமுதாயத்தின் தூண்களாகக் கருதப்படும் பெண்கள் தொடர்ந்து இழிவும் அவமானமும் படுத்தப்பட்டனர். இந்த அவமானத்தின் சின்னங்களாகத்தான் தேவரடியார் முறை திகழ்ந்து வந்தது. இந்தியா முழுவதும் பரவலாகக் காணப்பட்ட இம்முறை தமிழகத்தில் சிறப்பாகக் கடைபிடிக்கப்பட்டது. தேவரடியார்களுக்கு இச்சமூகம் மிகுந்த அநீதியை இழைத்துள்ளது.*

*இடைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் தேவரடியார்களின் பங்கு இன்றியமையாததாகும். அவர்கள் திருக்கோயில்களில் பணியாற்றிப் பக்தர்களுக்கும் தொண்டர்களுக்கும் அருளாளர்களுக்கும் கலையின்பத்தை வாரி வழங்கினர். அவர்களே நுண்கலைகளின் (Fine Arts) புகலிடங்களாகவும் திகழ்ந்தனர். தமிழ்ச் சமய வரலாற்றிலிருந்து அவர்களைப் பிரித்துப் பார்க்க இயலவில்லை. தமிழர்களின் திருக்கோயில் செயல்பாடுகளில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. அவர்களைப் பற்றியும் அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றியும் ஏராளமான கல்வெட்டுகள் புகழ்ந்துரைக்கின்றன. எனவே தேவரடியார்களைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது*

*தமிழர்கள் சமயப்பற்று மிக்கவர்கள். எனவே ஊர்கள் தோறும் அவர்கள் கோயில்களை அமைத்தனர். கோயில்களும் மடங்களும் அவர்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருந்தன. இக்கோயில்களில் பணிபுரிந்த பணியாளர்கள் "திருக்கோயில் பணியாளர்கள்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டனர். அக்காலக் கோயில்களில் பணிபுரிய ஏராளமான நபர்கள் தேவைப்பட்டனர். இது தவிரக் கோயில் திருவிழாக்களில் இசை, நடனம், கூத்து போன்ற நுண்கலைகளை நிகழ்த்தக் கலை வல்லுநர்கள் தேவைப்பட்டனர். இத்தேவைகளை நிறைவுசெய்யத் திருக்கோயில்களில் பணியாற்றியவர்களே தேவரடியார்கள் ஆவர். இக்கோயில்களுக்காகத் தம் வாழ்க்கையே அர்ப்பணித்தவர்கள் இப்பணிமக்கள்.*

*கலை என்பது மிகவும் நுட்பமான ஒன்று. எனவே அது நுண்கலை என்று அழைக்கப்பட்டது. நுட்பமான இக்கலையைப் பயிற்றுவிக்க நுட்பமான இயல்புடைய மகளிர் தேவைப்பட்டனர். நுண்கலைகள் ஆண்களைவிடப் பெண்களுக்கே எளிதில் வாய்க்கும் என்பதால் அவர்களுக்கே அது பயிற்றுவிக்கப்பட்டது. மனிதன் மனதை வசப்படுத்தி மகிழ்விக்கும் இயல்புடைய இசை, நடனம், பாட்டு, கூத்து போன்ற இயல்களில் மகளிர் பாண்டித்தியம் பெற்று அவற்றைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தித் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்தனர். பொழுது போக்கு அம்சங்கள் அதிகம் இல்லாத அக்காலத்தில் இவைகளே மக்களின் வாழ்வில் இடம்பிடித்தன. இடைக்காலத்தில் இக்கலைகளின் வித்தகர்களாகத் தேவரடியார்கள்*

திகழ்ந்தனர். கோயில்களில் மட்டும் அவர்தம் கலைத் திறன் வெளிப்பட்டாலும் அங்குச் சென்று வழிபட்ட அனைவரும் அவற்றைத் துய்த்து மகிழ்ந்தனர்.

**ஆய்வு முன்னோடிகள்**

தமிழகத்தில் சங்க காலம் முதல் பெண்களின் நிலைப்பற்றி பொதுவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் தேவரடியார் பற்றியும் தேவரடியார் முறைப் பற்றியும் குறைவான ஆய்வே மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாய்வு பெருமளவு தொல்லியல் சார்ந்து இருப்பதால் அதிக அளவு ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

திரு A.S.Altekar என்பவர் The position of women in Hindu Civilization (1956) என்ற நூலில் இந்தியாவில் பெண்கள் நிலையைப்பற்றி விரிவாகவும் தேவதாசி முறையைப்பற்றிச் சுருக்கமாகவும் குறிப்பிடுகின்றார்.

இது தவிர, திரு Dr.Daud Ali என்பவர் இயற்றிய நூலான Doners, Devotees, Daughters of God: Temple Women in Medieval Tamil Nadu (2000) என்பது தமிழ்நாட்டில் தேவதாசி முறையைப்பற்றி எடுத்துரைக்கின்றது.

திரு K.Chakarabothy என்பவரின் நூலான Women as Devadasis: Origin and growth of the Devadasi Profession (2000) என்பது இந்தியாவில் தேவதாசி முறையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் முடிவையும் எடுத்துரைக்கின்றது.

திரு L.A.K.Iyer இயற்றிய கட்டுரையான Devadasis in South India: Their origin and development (1926) என்பது தென்னிந்தியாவில் தேவதாசி முறையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் எடுத்துரைக்கின்றது.

இது தவிர டாக்டர் கே.கே.பிள்ளை இயற்றிய A Social History of The Tamils (1969) என்ற நூலும் டாக்டர் அ.சுவாமிநாதன் இயற்றிய Social and Cultural History of Tamil Nadu (1991) என்ற நூலும் தமிழ்நாட்டில் தேவரடியார் முறையைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

இவை யாவும் தேவதாசி முறை பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முன்னோடிகளாகும்.

### ஆய்வுச் சிக்கல்

1. சமூகப் புன்மையான தாசி முறை தேவரடியார் முறையின் தொடர்ச்சியா?
2. இடைக்காலத்தில் தேவரடியார்கள் எவ்வாறு சிறப்பிடம் பெற்றனர்?
3. இடைக்காலத் தமிழகத்தில் சிறப்பு பெற்றுத் திகழ்ந்த பெண்களின் நிலை

எவ்வாறு காலப்போக்கில் தரம் தாழ்ந்தது? போன்ற கேள்விகளை ஆய்வின் சிக்கல்களாக முன்வைத்து இந்த ஆய்வுக்கட்டுரை படைக்கப்படுகின்றது. இக்கேள்விக்கான விடைகளாக இக்கட்டுரையின் கூறுகள் அமைந்துள்ளன.

### ஆய்வின் நோக்கம்

தமிழ்ச் சமுதாயம் பெண்மையைப் போற்றும் சமுதாயமாகும். பண்டைய நாள்தொட்டு பெண்கள் உயர்வாக மதித்துப் போற்றப்பட்டனர். அதற்குச் சான்றாக இடைகாலத்தில் வாழ்ந்த தேவரடியார்கள் திகழ்ந்தனர். அவர்கள் நுண்கலைகளின் இருப்பிடங்களாகத் திகழ்ந்தனர். சாமானியன் முதல் அரசர்கள் வரை அவர்களைப் போற்றிப் புரந்தனர். இடைகாலத்தில் அவர்கள் பெற்ற சிறப்பை விளக்குவதுடன், பிற்காலத்தில் அவர்கள் எவ்வாறு வீழ்ச்சியைச் சந்தித்துத் தாசிகள் என்ற தாழ்வான நிலையில் தமிழ்ச் சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டனர் என்பதை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

### ஆய்வு முறை

இக்கட்டுரை பகுப்பாய்வு முறையையும் விளக்க ஆய்வு முறையையும் பின்பற்றி அமைகின்றது.

### தேவரடியார் முறையின் தோற்றம்

தமிழகத் திருக்கோயில்களில் பணியாற்றிய மகளிர் தேவரடியார்கள் என்ற பெயருடன் அழைக்கப்பட்டனர். இறைவனுக்காக அற்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிய தொண்டர்கள் இவர்கள் என்பது அவர்களின் பெயர்களே புலப்படுத்தும். தேவரடியார்களின் தோற்றம் குறித்து இதுவரை எந்த முடிவும் ஆய்வாளர்களால் எட்டப்படவில்லை. இவர்களைப் போன்று ஆடல் மற்றும் பாடல்களின் வித்தகிகள் சங்ககாலம் தொட்டு இருந்தபோதிலும் அவர்களெல்லாம் தேவரடியார்களாக கொள்ளப் படவில்லை. சங்கக் காலத்தில் கொண்டி மகளிர், பரத்தையர் போன்றோர் பொதுவாழ்வில் இருந்தனர் (தமிழ் நாட்டு வரலாறு - சங்க காலம் ப-ள்:48-49). சான்று:

"நெஞ்சில் நடுக்கூறுஉக் கொண்டி மகளிர்"
(மதுரைக் காஞ்சி:538)

"கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி"
(பட்டினப்பாலை:246)

ஆனால் அவர்களையெல்லாம் தேவரடியார்களாக கொள்ளவியலாது. ஆடல் கலையிலும் வல்லவர்களாகப் பல பெண்கள் பழம் காலம் தொட்டு இருந்து வந்துள்ளனர். இதற்குச் சான்றாகச் சிலப்பதிகாரத்தில் மாதவியைக் கொள்ளலாம். அவள் ஆடல் கலையிலும், அழகிலும் சிறந்தவளாக இருந்தபோதிலும் "கணிகை" என்ற பெயருடன் காட்சி தந்து பொன்னுக்கு விலைபோனாள். தேவரடியார் பற்றிய செய்தியை முதன் முதலாகப் பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருஞானசம்மந்தப் பெருமானே குறிக்கின்றார். அவர் இதுபோன்று சிவாலயங்களில் பணிபுரிந்த பணிமகளிரைப் பற்றி தம் பாக்களில் குறிப்பிட்டுச் செல்கின்றார்,

"காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமேன் றரங்கேறிச் சேயிழையார்
நாடமாடுந் திருவையாறே"

(தேவாரம்-திருவையாறு பதிகம்.பாடல்:6)

எனவே தேவரடியாரைப் போன்றே கோயிற் பணிபுரிந்த மகளிர் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பது இவற்றால் பெறப்படுகின்றது. இதுவே அவர்களின் தோற்றமாகக்கூடக் கருதவேண்டியுள்ளது.

இதே செய்தியை நாவுக்கரசர் பெருமானும் தம் பாடலில் உறுதி செய்கின்றார்,

"ஆருமணித்தடம் புண்முலை அறம்பையரொ டருளிப் படியர்
உரிமையிற் றோழுவார் உருத்திரப் பல்கணத்தார்
வெறிசடை விர திகளந்தணர் சைவர் பாசுப தற்கபாலிகள்
தெருவினிற் பொலியுந் திருவாரூ ரம்மானே"

(தேவாரம்-திருவாரூர் பதிகம்.பாடல்:3)

இதன் பின்வந்த சோழப் பாண்டியர் காலத்திலும் இம்முறை பரவிக்கிடந்ததைக் கருவூர் தேவர் பாக்களால் அறியலாம்,

"மின்நெடும் புருவத்து இளமயில் அனையர்
விளங்கல்செய் நாடகச் சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் நஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே"

(திருவிசைப்பா பாடல்:165)

எனவே சங்கக் காலத்தில் தேவரடியார்கள் என்ற முறை காணப் படவில்லை என்பதுடன், இதன் தொடர்ச்சியாய் வந்த பல்லவர்கள் காலத்தில் இவ்வழக்குத் தோன்றியதை இலக்கியச் சான்றுகள் மூலம் உறுதி செய்யலாம். இதற்குப் பின் வந்த சோழப் பாண்டியப் பேரரசர்கள் காலத்தில் இம்முறை அவர்கள் ஆதரவில் பல்கிப் பெருகிச் சிறப்புற்றது.

**தேவரடியார்களின் வகைகள்**

தமிழகக் கோயில்களில் பணியாற்றிய தேவரடியார்கள் பல்வகைப்பட்டவர். அவர்கள் தளிச்சேரிப் பெண்கள், தளியிலார், பதியிலார், வழியிலார், தேவரடியார்கள், கோயில் பிணாக்கள், தலைக்கோலிகள், உருத்திரகணிகையர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டாலும் இவர்கள் அனைவரும் ஒரு வகுப்பினரே. திருக்கோயில் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்த பெண்டிர் தளிச்சேரிப் பெண்கள் என்றும் இறைவனுக்குத் தொண்டு புரிவதையே வாழ்வாகக் கொண்டவர்கள் தேவரடியார்கள் என்றும் நாட்டியத் துறையில் வல்லவர்கள் நாடகக் கணிகையர் என்றும் யாரையும் மணம் புரியாமல் வாழ்ந்தவர்கள் பதியிலார் என்றும் உறவுகள் யாருமற்றுக் கோயிலைச் சார்ந்து வாழ்ந்த பெண்கள் வழியிலார் என்றும் சிவன் கோவிலுக்கு நேர்ந்து விடப்பட்டோர் உருத்திரக் கணிகையர் என்றும் அழைக்கப்பட்டனர் (சதாசிவ பண்டாரத்தார்.தி.வை.ப:477)

இது போன்று தொண்டு செய்த பெண்டிர் இடைக்காலத் தமிழகத்தின் கோயில்களில் ஏராளமானோர் காணப்பட்டனர். அவர்கள் தேவரடியார்கள் என்பதை வேறுபடுத்திக் காட்ட அவர்கள் தோள்களிலும், பாதங்களிலும் இலச்சினை அடையாளங்கள் பொறிக்கப்பட்டன. சிவன் கோயில் பணிபுரிந்தவர்களுக்குச் சூலம் மற்றும் நந்தி இலச்சினையும் வைணவக் கோயில்களில் பணிபுரிந்தவர்களுக்குச் சங்கு அடையாளமும் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டன. சான்றாகக் காளஹஸ்தி கோயிலைச் சார்ந்த தேவரடியார்களைச் சோழமன்னனின் ஆட்கள் தவறுதலாகப் பிடித்து வந்து அரசனின் பணியில் சேர்த்து விட்டனர். அவர்களின் உடலில் இருந்த சூல இலச்சினை அழிக்கப்பட்டு அரசனின் இலச்சினையான புலி உருவம் பொறிக்கப்பட்டது. பின்னர் உண்மை அறியப்பட்டதும் அவர்கள் மீண்டும் கோயில் பணியில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் உடலில் இருந்த அரசு முத்திரை அழிக்கப்பட்டு மீண்டும் சூல முத்திரை பொறிக்கப்பட்டது (ARE.No:141/1922). அவர்களின் உடல்களில் இலச்சினை முத்திரைகள் பொறிக்கப்பட்ட செய்தியைக் கீழ்க்கண்ட பாடலும் உணர்த்தும்,

> “தீயிற் போலிஇறை செஞ்சுடர் ஆழி
> திகழ்திருச் சக்கரத்தின்
> கோயிற் போறியாலே ஒன்றுண்டு நின்று
> குடிகுடி ஆட்செய்கின்றோம்”

(திருப்பல்லாண்டு. பாடல்:7)

இது போன்ற நடன மாதர்கள் அரசர்களைச் சார்ந்திருந்தால் அவ்வரசர்களின் முத்திரைகள் அவர்களின் உடலில் பொறிக்கப்பட்டன. சான்றாகச் சோழ மன்னர் பணியில் இருந்த மகளிருக்குப் புலி முத்திரை பொறிக்கப்பட்டது. ஆனால் எக்காலத்திலும் பிராமண இனத்தவர் எவரும் தேவதாசிகளாக ஆக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தேவதாசிகள் கோயிலுக்கு அளிக்கப்படும்

நிகழ்வானது கோயில்களில் விழாவாகக் கொண்டாடப்பட்டது. இச்சிறப்பான நிகழ்வில் பெண்கள் திருமாங்கல்யத்தை இறைவனே கட்டுவதாக எண்ணித் தம் கழுத்தில் கட்டிக்கொள்வர். அன்று முதல் கடவுளரே அவர்தம் கணவனாகக் கருதப்பட்டனர். இச்சடங்கு சான்றோர்கள் முன்பு நிகழ்த்தப்பட்டது. அன்று முதல் இப்பெண்டிர் தேவரடியார் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் அணிந்த தாலி வட்டவடிவில் சிறிய பொன்னைப் போன்று காணப்பட்டது. திருமணம் செய்யாமல் வாழும் தேவரடியார்கள் மட்டும் இத்தாலியைக் கழுத்தில் கட்டிக்கொள்வர். பிற மகளிர் கழுத்தில் அணிய மாட்டார்கள். இந்நிகழ்வு "பொட்டுக் கட்டுதல்" என்றழைக்கப்பட்டது.

**தேவரடியார்களின் பணிகள்**

தேவரடியார்கள் திருக்கோயில் பணிக்காகத் தம் வாழ்வையே அற்பணித்து அங்குப் பணிபுரிந்து வந்தனர். அவர்கள் பணி யாது என்று அக்கால அரசினர் தெளிவாக வரையறை செய்திருந்தனர். அவர்கள் அன்றாடம் கோயில்களில் உள்ள பணிகளைச் செம்மையுடனும், அற்பணிப்பு உணர்வுடனும் செய்துவந்தனர். கோயில்களில் அலகிடுதல், அரிசியைத் தூய்மையாக்குதல், மெழுகிடுதல், மலர் தொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டதுடன் தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் போன்ற திருப்பாக்களை இசையுடன் ஓதவும் செய்தனர். இவர்கள் நடனம், கூத்து போன்ற கலைகளில் வித்தகர்களாகவும் திகழ்ந்தனர். மேலும் இறைவன் திருவீதி உலா வரும்போது பாடவும் வேட்டைத் திருவிழாவின்போது நடனமாடவும் செய்தனர் (ARE.No:397/1922). இது தவிர இன்ன பதிகங்களை இன்ன முறையில் பாடவேண்டும் என்று முடிவெடுக்கும் அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது (ARE.No:143/1940-41). சான்றாகத் திருவதிகையில் சுவாமி எழுந்தருளும் போது பதியிலார் ஆடவும் திரையெடுத்தால் தேவரடியார் ஆடவும் திட்டம் செய்யப்பட்டிருந்தது (SII.Vol:7.No:333).

பாண்டிய நாட்டைச் சார்ந்த தேவரடியார்கள் பணிகளை பாண்டிய மன்னர்கள் தெளிவுடன் வகுத்தளித்தனர். சான்றாகத் திருத்தருவை சிவன் கோயில் காலை பூஜைக்கும் திருவடி பூஜைக்கும் மாலை பூஜைக்கும் திருவந்தி காப்புக்கும் சந்தனம் அரைத்தால், மாலை தொடுத்தல், மகாமண்டபம் மற்றும் பிரகாரம் பெருக்குதல் போன்ற பணிகளை இவர்கள் செய்யக் கட்டளையிடப்பட்டிருந்தது (ARE.No:373/1935-36). இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கோயிலுக்கு வழங்கப்பட்ட நெல்லைக் குற்றி அரிசியாக்கிக் கோயில் பிரசாதம் வழங்கும் பணியினையும் இவர்கள் செய்து வந்தனர் (ARE.No:370/1916). சிலர் கடவுள் வீதி உலா வரும்போது சாமரம் வீசவும் (ARE.No:363/1950-51) சிலர் தினப்பூசையின் போது தெய்வச்சிலையின் முன் ஆடவும் பாடவும் செய்தனர் (ARE.No:242/1940-41). சிலசமயம் திருவிழாவின்போது இவர்கள் திருத்தட்டை ஏந்தவும் மலர்தட்டை தாங்கவும் செய்தனர். சான்றாக ஒவ்வொரு ஆண்டும் திருவொற்றியூரில் உள்ள கோயில் திருவாதிரை திருவிழாவின்போது தேவரடியார்கள் திருவெம்பாவை ஓதினர், அவ்வமயம் 22 தளியிளார் நடனம் ஆடினர், ஒருவர் நட்டுவாங்கம் செய்தார், 16 பேர் தேவாரப் பதிகங்களை அகமார்க்க முறையில் பாடினார் (ARE.No:128/1912).

## தேவரடியார் முறையின் இயல்புகள்

தேவரடியார்கள் தாமே விரும்பி இப்பணியை ஏற்றுக் கொண்டார்கள். சிலர் அவர்களின் குடும்பத்தாரால் விரும்பியோ, விரும்பாமலோ கோயில்களுக்கு அற்பணிக்கப்பட்டனர். திருவலம் விஸ்வநாதர் கோயிலுக்கு அழகிய பாண்டியன் பல்லவராயன் என்பவன் தன் குடும்பப் பெண்கள் ஐவரை தேவரடியாராக அற்பணித்து

"திருவல்லம் உடையார் திருப்பாதத்தில் உதகம்

பண்ணித் திரிசூலம் சாட்டி தேவரடியாராக விட்டேன்"

என்று கூறுவது இதை உணர்த்தும் (ARE.No:230/1921). வேறு சிலர் விலைக்கு வாங்கப்பட்டுக் கோயில்களுக்குத் தானமாக வழங்கப்பட்டனர். சான்றாகத் திருவக்கரை சந்திரமௌளீஸ்வரர் ஆலயத்திற்கு அவ்வூரின் மூன்று வேளாளர்கள் ஒரு பெண்ணையும், அவளின் மகளையும், அவளின் குழந்தையையும் விலைக்கு வாங்கித் தானமாக அளித்தனர் (ARE.No:183/1904). இச்செய்தியை உணர்த்தும் கல்வெட்டு வருமாறு:

"எங்களடியார் அங்காடியும் இவள்
மகள் பேரங்காடியும் இவள்
மக்களும் திருவக்கரையுடைய
மாதேவற்க்கு தேவரடியாராக
நீர்வார்த்துக் குடுத்தோம்"

இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் ஒருவர் நான்கு பெண்களை எழுநூறு காசுக்கு வாங்கிக் கி.பி. 1174 இல் திருவலங்காட்டு கோயிலுக்கு அளித்தார் (ARE.No:80/1913). மேலும் திருவண்ணாமலையில் திருவண்ணாமலை மாணிக்கம் என்ற பெண் தானும் தன் குடும்பமும் சேர்ந்து விருப்பத்துடன் அண்ணாமலையார் கோயிலில் பணிபுரிந்தாள் (ARE.No:530/1902). பல தேவரடியார்கள் மணம்புரிந்து வாழும் உரிமை பெற்றிருந்தனர். சான்றாகத் திருவொற்றியூரில் நாகன் பெருங்காடன் என்பவனின் மனைவி சதுரசன் சதுரி என்பவள் அவ்வூர் கோயிலில் தேவரடியாராகப் பணிபுரிந்தாள் (ARE.No:147/1912). அச்சுதமங்கலம் கோயிலில் திருமணமான தேவரடியார்கள் தொண்டு புரிந்துவந்தனர் (ARE.No:411/1925). திருச்சத்துறை கோயிலில் சோழன் நிருத்தப் பேரரையன் என்பவனின் மகள் தன் கணவனுடன் பணிபுரிந்து வந்தாள் (ARE.No:206/1931). திருவாதவூரில் ஆலாலசுந்தரம் நங்கை என்ற பெண் பட்டன் தேவன் என்பவனை மணம் புரிந்த பின்னரும் பணி செய்து வந்தாள் (ARE.No:471/1962-63). இவற்றால் தேவரடியார்களில் சிலர் மணம் புரிந்தும் சிலர் மணம் புரியாமலும் கோயிலில் பணிபுரிந்து வந்தனர் என்பது புலனாகின்றது.

**தேவரடியர்களின் கலைப்பணிகள்**

தேவரடியார்கள் நுண்கலை வித்தகர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் இசைக்கலையிலும் நாடகக்கலையிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் சிவன் கோயிலில் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாக்களையும், வைணவ ஆலயங்களில் பிரபந்தப் பாக்களையும் ஓதிவந்தனர். இவர்களின் சிறப்பான ஆட்டத் திறமையைக் கண்ட அக்காலச் சமூகம் இவர்களை "கூத்தாடும் தேவரடியார்" என்று சிறப்புடன் அழைத்தது (SII.Vol:7.No:112). இசையில் வல்ல தேவரடியார்களுக்கு "தலைக்கோலி" என்ற சிறப்பு பட்டமும் அரசர்களால் வழங்கப்பட்டது. இப்பட்டம் அவர்களின் பெயர்களுடன் சேர்த்து வழக்கிலிருந்தது. சான்றாகப்,

1. பதியிலார் நக்கன் அரங்கமான ஜெயங்கொண்ட சோழத் தலைக்கோலி,
2. நக்கன் பவழக்குன்றான மதுராந்தக தலைக்கோலி, (SII.Vol:15.No:520),
3. அருள்தேவனார் மகளான நக்கன் பிரதமாதேவியான
4. மும்முடிச் சோழத் தலைக்கோலி (ARE.No:563/1926),

போன்ற சிறப்பான தேவரடியர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவர்களைக் கலையில் வல்லவர்களாக ஆக்கவும் இசையின் நுட்பங்களை ஓதுவிக்கவும் நடனக் கலையைப் பயிற்றுவிக்கவும் பல திறமையான நட்டுவனார்கள் பணியமர்த்தப் பட்டனர் (SII.Vol:5.No:750). அவர்களுக்கு அரசினரால் ஊதியம் வழங்கப் பட்டது.

**தேவரடியர்களின் சிறப்புகள்**

தேவரடியார்கள் தம் திறமையாலும் சேவையாலும் பழந்தமிழ் சமூகத்தில் பெருமதிப்பும் மரியாதையும் பெற்றிருந்தனர். அவர்களின் தெய்வப் பக்தியும் அறச்சிந்தனையும் ஒழுக்கவாழ்வும் பொதுச் சேவையும் செல்வவளமும் குணநலனும் போற்றுதற்குரியதாகத் திகழ்ந்தது. சோழர் காலத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்த தேவரடியார்களின் பெயர்களைக் கல்வெட்டுகள் செப்புகின்றன. அவை வருமாறு:

1.பெரிய தளிச்சேரி நக்கன் சிலம்பு
2.ஆயிரம் தளி நக்கன் பூங்கா
3.பெரிய தளிச்சேரி நக்கன் மாதேவி
4.தளி நக்கன் கருமாணிக்கம்

முதலாம் இராஜராஜன் தான் கட்டுவித்த தஞ்சை பெரிய கோயிலில் பணிபுரிய நாடு முழுவதிலும் உள்ள திறமையான தேவரடியார்கள் நானூறு பேரைத் தெரிவு செய்து அவர்களைப் பணியமர்த்தினான். இவர்கள் தங்குவதற்குக் கோயிலுக்கு வடக்கு தெற்காக அமைந்த தெருக்களில் வீடுகளைக் கட்டி அவர்களைக் குடியமர்த்தினான் (SII.Vol:11.No:66). அவர்கள் குடியிருந்த பகுதிகள் "தளிச்சேரிகள்" என்று அமைக்கப்பட்டன. இவர்கள் சோழர் காலத்தில் பெருமதிப்பு பெற்றுத் திகழ்ந்தனர். தேவரடியார்கள் கோயில்

பணியுடன், கோயில் சார்ந்த நிர்வாகப் பணியினையும் சிறப்புடன் மேற்கொண்டிருந்தனர். சான்றாகத் திருப்பத்தூரில் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் அவன் அரசி நம்பிராட்டியார் அவனி முழுவதும் உடையாள் என்பார் அவ்வூர் சிவன் கோவிலுக்கு வழங்கிய அறக்கட்டளையைப் பராமரிக்கும் பொறுப்பை அக்கோவிலின் தேவரடியார் குலசேகர மாணிக்கம் என்பவளிடம் ஒப்படைத்தார் (ARE.No:190/1935-36). அவளும் அதைத் திறமையுடன் நிர்வாகம் செய்தாள். இவற்றால் ஆடல் கலையுடன், நிர்வாகத் திறனும் இவர்களுக்கு வாய்க்கப் பெற்றிருந்தது புலனாகின்றது.

## தேவரடியார்களின் தொண்டுகள்

தேவரடியார்கள் இறைப்பணியையும் பொதுச்சேவையையும் தம் வாழ்வின் இருகண்களாகக் கருதி வாழ்ந்தனர். அவர்கள் வழங்கிய பலவிதக் கொடைகளும் நிவந்தங்களும் இதை நன்குணர்த்தும். தாம் ஈட்டிய செல்வத்தைப் பலவித நற்பணிகள் செய்து மக்கள் மனதில் நீங்க இடம் பிடித்தனர். பிறருக்கும் சமுகத்திற்கும் இவர்கள் செய்த தொண்டுகளை நாடு முழுவதும் உள்ள கல்வெட்டுகள் உணர்த்தும். சான்றாக உத்திரமேரூர் கோயிலின் வெளிப்பிரகாரச் சுவரையும் அபிஷேக மண்டபத்தையும் ஆயிரத்து இருநூற்று மாணிக்கம் என்ற தேவரடியார் அமைந்து தந்தாள் (ARE.No:172/1923). ஊட்டத்தூரின் தொகுமாணிக்க நாயனார் கோயிலில் அம்மன் சன்னதியையும் பிரகாரத்தையும் சிவகாமசுந்தரி மாணிக்கம் என்பவள் கட்டுவித்தாள் (ARE.No:330/1929). திருப்பாலைவனத்தில் உள்ள மடத்தில் அடியார்களுக்கு அமுது படைக்கக் கண்ட கோபால மாணிக்கம் என்பவள் ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினாள் (ARE.No:177/1918). பிரம்மதேசத்தில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் கோயிலில் தினமும் விளக்கெரிக்க முப்பத்திரெண்டு பசுக்களையும், ஒரு காளையையும் கோயிலுக்குத் தானமாக அவ்வூர் தேவரடியார் அளித்தாள் (SII.Vol:5.No:360). திருவொற்றியூரில் உள்ள சிவன் கோயிலில் நுந்தா விளக்கெரிக்க சாணி ஒற்றி ஆழ்வி என்பவள் நிவந்தம் அளித்தாள். திருவலஞ்சுழி கோயிலில் திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், கண்ணப்ப நாயனார் போன்றோரின் படிமங்கள் அமைக்க இரண்டு தேவரடியார்கள் நிலக்கொடை வழங்கினர் (SII.Vol:8.No:288).

திருநெல்வேலி பிரம்மபுரி கோயிலில் சாத்தன் தேயம் என்பவள் ஒரு நுந்தா விளக்கு வைத்தாள் (SII.Vol:14.No:8). இதே மாவட்டம் வள்ளியூரில் உலக முழுவதும் உடையாள் என்ற சாந்தி கூத்தி அம்மன் கோயில் ஒன்றைக் கட்டுவித்தாள் (ARE.No:364/1929-30). திருப் பெருங்குளம் சிவன் கோயிலில் லிங்கத்தையும் பிள்ளையாரையும் சுப்பிரமணியரையும் உருமச் சுந்தரத் தலைக்கோலி மற்றும் சிவஞானத் தலைக்கோலி என்ற இருவர் அமைத்துத் தந்தனர் (ARE.No:230/1929-30). இது தவிர வேறுவிதமான தொண்டுகளையும் தேவரடியார்கள் செய்ததைச் சான்றுகள் உணர்த்தும். சான்றாகத் திருவாதவூர் திருமறைநாதர் கோயிலுக்குச் சொந்தமான ஊர்கள் சில செல்வர்களிடம் கடனாக அடைமானத்தில் கிடந்தன. இதையறிந்த ஆலாலசுந்தரம் நங்கை என்ற தேவரடியாள் பொருள் தந்து அதை மீட்டதுடன் அக்கோயிலில் சந்திரசேகரர் சிலையையும் அமைத்து அதற்கு விலையுயர்ந்த அணிகலன்களையும் தானமாக அளித்தாள் (ARE.No:471/1962-63).

**தேவரடியார்களின் உரிமைகளும் சலுகைகளும்**

தேவரடியார்கள் தம் சிறப்பான பணிகளுக்காகவும் தன்னலமற்ற சேவைகளுக்காகவும் அரசர்களும் உயர்குடியினரும் பொதுமக்களும் ஆலயங்களும் அவர்களுக்குப் பல விதச் சிறப்புகள் செய்து அவற்றைக் கல்வெட்டுகளில் பதியச்செய்து பின்வரும் தலைமுறை அறியுமாறு செய்தனர். சான்றாகக் கங்கை கொண்ட சோழபுரத்தின் கோயிலில் பணியாற்றிய 24 தேவரடியார்களுக்கு பொன்னும் பொருளும் அணியும் மணியும் நிலமும் வீடும் முதலாம் இராசேந்திரச் சோழனால் வழங்கப்பட்டது. மேலும் இக்கோயிலின் சித்திரைத் திருவிழாவில் சாந்திக் கூத்து என்ற நாடகத்தின் ஒன்பது அங்கங்களையும் நன்றாக நடித்துக்காட்டிய ஏழுநாட்டு நங்கை என்பவளுக்கு நிலங்கள் தானமாக வழங்கப்பட்டது *(ARE.No:253/1914).* இராமநாதபுரம் திருமாலு கண்டான் கோட்டையில் முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் காலத்தில் தேவரடியார்களுக்கும் அவர்கள் வாரிசுகளுக்கும் சில சலுகைகள் வழங்கப்பட்டன. அவையாதெனில் அவ்வூரில் வாழும் தேவரடியார்களின் பெண்வாரிசுகளுக்கு நாளொன்றுக்குக் கோயில் சார்பில் இரண்டு நாழிகை நெல் வழங்கப்பட்டது. ஆண்வாரிசு இல்லாத மகளிருக்கு மட்டுமே இச்சலுகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு நெல் வழங்க இயலாத நிலை ஏற்பட்ட பொழுது ஒரு மா நன்செய் நிலம் வழங்கப்பட்டது *(ARE.No:23/1931-32).*

சோழநாட்டில் சிறப்பான தலைக்கோலி பெண்களுக்கு 60 மாநிலம் வரை தானம் வழங்கப்பட்டது *(ARE.No:211/1912).* அரசர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் இவர்களது பணியைப் பாராட்டிப் பல சலுகைகள் வழங்கினர். சான்றாகச் சிற்றிங்கூரில் உள்ள திருப்புலிபகவ நாயனார் கோயிலில் ஆடல் கலையில் வல்ல நிறுத்த விடங்கி என்பவளைப் பாராட்டி அவ்வூர் சபையோர் கோடியூரில் அவளுக்கு நிலங்களை வழங்கினர் *(ARE.No:370/1909).* மன்னார் கோயிலில் உள்ள கோபால சுவாமி கோயிலில் பணிபுரிந்த தேவரடியார்களுக்கு அவ்வூர் சபையினர் குடியிருக்க வீட்டையும் நிலங்களையும் தானமாக வழங்கினர் *(SII.Vol:14.No:132).* இராமநாதபுரம் திருமலைக் கோயிலுக்குச் சிறப்புடன் திருப்பணி செய்த ஒரு தேவரடியாளுக்கும் அவளது சந்ததிக்கும் கோயிலில் நுழையும் போது சங்கூதவும், பறையொலி எழுப்பவம் கோயில் நிர்வாகம் சிறப்பு செய்தது *(ARE.No:33/1924).*

**தேவரடியார்களின் பிற்கால நிலை**

இடைக்காலத் தமிழகத்தில் சிறப்புடன் செயல்பட்டு வந்த தேவரடியார் முறையானது காலப்போக்கில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது. பேரரசு சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் காலத்திலும் அவர்தம் சிற்றரசர் காலத்திலும் சிறப்புடன் திகழ்ந்த இம்முறையானது பல காரணங்களால் வீழ்ச்சியுற்றது. கி.பி. 13 மற்றும் 14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் தமிழ் மக்கள் அனைவரையும் பாதித்து. பேரரசுகளின் வீழ்ச்சி, ஓயாத அயல்நாட்டவர் படையெடுப்புகள், பொருளாதாரச் சீரழிவு, சமூகப் பேரழிவு போன்றவற்றால் தமிழகமே போர்க்களமானது. ஏராளமான மக்கள் வறுமையில் சிக்கிச் சின்னா பின்னமானார்கள். பலர் படையெடுப்பாளர்களால் அடிமைகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். டெல்லி சுல்தானிய படையெடுப்புகளும், போசளர் படையெடுப்பும், தெலுங்கு சோழர் படையெடுப்பும், சேரர் படையெடுப்பும் நாட்டைச் சீரழித்தது. அவ்வமயம் நாட்டில் அதிகாரப் பலத்துடனும் பொருளாதார வளத்துடனும் அரசர்களுக்கு அடுத்த நிலையில் அதிகார மையங்களாகத் திகழ்ந்த கோயில்கள் பெரும்

வீழ்ச்சியைச் சந்தித்தன. அவற்றின் செல்வாக்கும், சிறப்பும் முற்றிலுமாக அழிந்தொழிந்தது. இவற்றால் கோயில்களைச் சார்ந்து வாழ்ந்த தேவரடியார்கள் வாழ்க்கையும் பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

அரசின் கட்டுப்பாட்டில் இருந்த வரை இம்முறை கட்டுக்கோப்புடன் சிறந்து விளங்கிற்று. போருக்குப் பின் எழுந்த அரசியல் சூழலில் திருக்கோயில்கள் தனி நபர்களைச் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் காரணத்தால் தேவரடியார்களும் தம் வாழ்வாதாரத்துக்கு அத்தனிநபர்களைச் சார்ந்து வாழவேண்டிய வரானார்கள். இவற்றால் அவர்களின் நிலை முன்னெப்பொழுதும் இராத அளவு மோசமடைந்து. பலர் ஆனாதைகளாகவும், பிச்சைக்காரர்களாகவும் மாறினர். பலர் வறுமையில் வாழ்ந்து மடிந்தனர். பலர் செல்வர்களின் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்டனர். பலர் உயர்குடியினரின் காமக்கிழத்தியாய் மாறினர். இன்னும் சிலர் கீழ்நிலை சென்று விபச்சாரிகளாக மாறித் தம் வாழ்வைக் கழிக்கும் துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இடைக்காலத்தில் அவர்கள் பெற்ற சிறப்பையும் பெருமையையும் பின்பு வந்த பல நூற்றாண்டுகளிலும் பல ஆட்சியாளர்கள் காலத்திலும் அவர்கள் பெறவே இயலவில்லை. இவர்கள் 15 ஆம் நூற்றாண்டு வரை தேவரடியார்கள் என்று சிறப்புடன் அழைக்கப்பட்டு, 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் மரியாதை குறைவுடன் தேவதாசிகள் என்று அழைக்கப்பட்டனர். பின்னர் 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் தாசிகள் என்றும் இழிவுடன் அழைக்கப்பட்டனர்.

தேவரடியார்கள் என்று உயரிய நிலையில் கலைச்செல்விகளாக வலம் வந்த அவர்கள் வாழ்வு தீவினைப்பயனாய் தேவதாசிகளாகவும் தாசிகளாகவும் தரம் தாழ்ந்து தினசரிப் பிழைப்பிற்கு ஆள்பிடிக்கும் வேலைசெய்து தம்துயர வாழ்க்கையைக் கழித்தனர். ஒரு. காலத்தில் கலைத் தொண்டும் இறைப் பணியும் செய்து வாழ்ந்த அவர்கள் பணத்திற்காகச் சாதுர்யம் புரியும் பொருட் பெண்டிராக வாழ்ந்தனர் என்பதைக் கீழ்க்கண்ட பாடல் உணர்த்தும்:

“மெள்ள வரவழையுன் வீட்டிலே வந்தா லெதிர்போய்ப்
பரவு வெகுமானம் பண்ணு - தெருவிலே
கண்டா லெழுந்திருந்து நில்லு கனமோகஞ்
கொண்டார்போல் மெத்தக் குழைந்துவிடு - பெண்டாக
வைத்தருளும் வேறே மனம்பிடிக்கு தில்லையென்று
சத்தியமாய்ச் சும்மா தலையிலடி
ஆசை படாதே யாரை விளைந்தா லன்றிநம்போல்
வேசைக்கு வெள்ளாண்மை வேறுண்டோ - பேசையில்
வேற்றொருத்தி பேச்செடுக்க வொட்டாதே விம்மியழு
தூற்றுகளக் கண்ணி குடுத்துவிடு - தூற்றுங்
கனவுவெளி வராமல் கைற்நகத்துக் குள்ளே
மிளகுபொடி வைத்தவளே வேசை”

**(தெய்வச்சிலையார் விறலி விடு தூது,பாடல்கள்:332-337)**

*இப்பெண்டிரின் தாய்மார்கள் சாகசம் புரிபவர்களாகவும், சகோதரர்கள் ஆள்பிடிக்கும் வேலையும் செய்து வந்தனர். தாய்க்குப் பின் மகள் என்று இவ்வழக்கம் தொடர்ந்தது.;*

**தேவரடியார் முறையின் மறைவு**

*பல நூற்றாண்டுகள் சிறப்பாகவும், பல நூற்றாண்டுகள் தரம் தாழ்ந்தும் காணப்பட்ட இம்முறையானது கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு முடிவுக்கு வந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி.* 1929 *இல் தேவதாசி தடைச்சட்டம் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டு இம்முறை ஓரளவு ஒழிக்கப்பட்டது. பின்னர்* 9, *அக்டோபர்,* 1947 *இல் தமிழ்நாடு தேவதாசிகள் சட்டத்தின் மூலமாக இம்முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது. இதன் ஒழிப்புக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் மூலகாரணமாக இருந்தனர். அவர்களின் இடைவிடாத முயற்சியால் இவ்வழக்கம் ஒரு முடிவுக்கு வந்தது. பழம் பெருமைமிக்க தேவரடியார்கள் காலத்தின் கோலத்தால் அனைவரும் வெறுத்தொதுக்கும் பாலியல் தொழிலாளர்களாய் மாறி வாழ்ந்தது சீர்மிகு தமிழக வரலாற்றில் இருண்ட நிகழ்வுகளாகவும் கறைபடிந்த பக்கங்களாகவும் துயர்மிகு சம்பவங்களாகவும் பதிவு செய்ய வேண்டியுள்ளது.*

**தேவரடியார் முறை-ஆணாதிக்கச் சமூகத்தின் வெளிப்பாடு**

*தமிழ்ச் சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாகும். இங்கு ஆண்மகனே யாவற்றிலும் முதனிலை படுத்தப்பட்டான். பழம் தமிழ்ச் சமுதாயத்தில் ஆண்மகன் பலவிதச் சலுகைகள் துய்த்தும், மகளிர் பலவித இன்னல்களை அனுபவித்தும் வந்தனர். இச்சமுதாயத்தில் கடந்த நூற்றாண்டு வரை தவறாமல் கடைபிடிக்கப்பட்ட வழக்கங்களான பலதார மணம், பால்ய விவாகம், கைம்பெண் நிலை போன்றவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டது பெண்டிரேயாவர். ஆண்கள் எல்லா நிலையிலும் எப்பொழுதும் சலுகைகளையும் இன்பங்களையும் துய்த்தனர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதி நம் சமுதாயத்தின் தாரகமந்திரமாகப் பெருமையுடன் கருதப்பட்ட போதிலும் அது ஏட்டளவிலே காணப்பட்டது. சான்றாகப் பாண்டியன் ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்* (கி.பி.1190-1216) *அந்தப்புரத்தில் ஐநூறு பெண்கள் அவனுக்குக் காமக்கிழத்திகளாக இருந்ததை மார்கோபோலோ (Marco Polo) என்ற மேல்நாட்டுப்பயணி குறித்துச் செல்வார் (Neelakanta Sastri.K.A. PP:164-165). அக்காலப் பெண்டிரின் அவல மற்றும் நிராதரவான நிலையை உணர்த்துவதற்கு இதைவிட வேறு சான்று இல. அக்காலப் பெண்கள் வெறும் பள்ளியறைப் பதுமைகளாகவும் உரிமைகள் அற்ற பாவைகளாகவும் ஆதரவற்ற ஜடங்களாகவுமே கருதப்பட்டதற்கு இதுவே சாலச்சிறந்த சான்று. இதே போன்று அச்சமூகத்தில் சிறப்பாக வாழ்ந்த தேவரடியார்கள் கால நிர்ப்பந்தத்தால் வீழ்ச்சியடைந்து தேவதாசிகளாகவும், தாசிகளாகவும் மாறியது அல்லது மாற்றியது இச்சமூகத்தினுடைய கோரமுகத்தின் வெளிப்பாடாகும். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்று சீரிய தமிழ்ச் சமுதாயத்தின் கொடுமையான இன்னொரு முகத்திற்கு இலக்கணமாக இத்தேவதாசி முறை திகழ்ந்தது.*

**முடிவுரை**

*பழம் தமிழ் சமுதாயம் எல்லா நிலையிலும் சிறப்பானது என்று பல ஆய்வாளர்கள் பெருமிதம் கொள்வர். அரசியல், சமூக, பொருளாதார, சமய, கலை மற்றும் பண்பாட்டு துறைகளில் பிற சமுதாயங்களை விட இச்சமூகம் சிறப்பானதாகவும் மேலானதாகவும் காணப்பட்டது என்று அவர்கள் இரும்பூது கொள்வர். உண்மையில் தமிழ் சமுதாயம் பக்தியையும் இறைநம்பிக்கையையும் அடிப்படை ஏதுவாகக் கொண்டதாகும். அது கோயில்கள் என்ற பருப்பொருட்களை மையமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. இறைநம்பிக்கையையும் நன்னெறிகள் மட்டுமே அதன் தாரகமந்திரம். இத்தகைய கோயில்களின் அடிப்படை ஆதாரங்களாகவும் ஆணிவேர்களாகவும் திகழ்ந்தவர்களே இத்தேவரடியார்கள். அவர்கள் திருக்கோயில் பணியின் வளர்ச்சியோடு தாமும் வளர்ந்து, அவற்றின் வீழ்ச்சியோடு தாமும் வீழ்ந்தனர். நுண்கலைகளைச் சமூகத்தில் நன்கு வளர்த்து அவற்றை அனைவரும் துய்க்கச்செய்த பெருமை அவர்களையே சாரும். அவர்களின் அருமை பெருமைகளை அறிந்த தமிழ் மன்னர்கள் ஏராளமான பரிசில்களைத் தந்து அவர்களைச் சிறப்பித்தனர். கோயில் பணியில் தமக்குக் கிடைத்த சிறு ஊதியத்தையும் தமக்கெனச் செலவு செய்யாமல், பொதுத்தொண்டிற்குச் செலவு செய்த அவர்கள் மிகவும் போற்றுதற்குரியவர்கள்.*

*இடைக்காலத்தில் கோயில் என்ற அறநிலையங்களின் பெருமையை அறிந்த ஏராளமான மகளிர் தேவரடியார்களாக தம்மை அர்பணித்துக் கொண்டு ஆர்வத்துடன் பணிபுரிந்தனர். பழந்தமிழ் கோயில் நிர்வாகம் சிறப்புடன் நடைபெறுவதற்கு அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. தமிழ்நாட்டு கோயில்களில் பணியாற்றிய தேவரடியர்களின் வாழ்க்கை அப்பழுக்கற்றதாகவும் போற்றுதற் குரியதாகவும் தியாக உணர்வுடனும் தூய்மையானதாகவும் வெளிப்படையானதாகவும் காணப்பட்டது (ARE.No:172/1923 & ARE.No:147/1912). இறுதியாக அரசியல் காரணங்களாலும் சமூகச் சீரழிவாலும் பொருளாதார வீழ்ச்சியாலும் தமிழ்ச் சமுதாயம் பல நிலையில் தன் சிறப்பினின்று வீழ்ச்சியுற்றபோது இத்தேவரடியார் முறையும் தமிழகத்தில் வீழ்ச்சியடைந்தது.*

## References

Pillai.K.K, (1969). A Social History of the Tamils, Chennai: University of Madras

Pillai.K.K, (2013). History of Tamil Nadu- People and Culture, Chennai, International Institute of Tamil Research

Swaminathan.A, (1991). Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa Publications

Neelakanta Sastri.K.A, (1935). The Cholas, Chennai: University of Madras

Neelakanta Sastri.K.A, (2001). Foreign Notices of South India, Chennai: University of Madras

Pulavar Nadarajan, (2014). *Thirugnanasambandar Thevaram*, Chennai: Uma Publications

Pulavar Nadarajan, (2016). *Thirunavukkarasar Thevaram*, Chennai: Uma Publications

Thiruvengada Ramanujadesan, (2014). *Periyazhvar Thiruppallandu*, Chennai: Uma Publications

Kumarasami Avadahani, (1936). *Deivasilayar Virali Vidu Thoothu*, Chennai: B.N.J.Educational Printers

Maduraik Kanchi, (2007). Chennai: New Century Book House (Pvt) Limited Company

Pattinappalai, (2007). Chennai: New Century Book House (Pvt) Limited Company

Raman.K.V, (1977). History of *Pandiyas*, Chennai: Tamil Nadu Text Book Society

Sathasiva Pandarathar.T.V, (1972). History of *Pandiyas*, Chennai: Thirunelveli Saiva Siddhantha Noorpathippu Kazhagam.Ltd

Balasubramanyam.M, (1978). Political and Cultural History of Cholas Chennai: Tamil Nadu Text Book Society

History of Tamil Nadu-Sangam Age, (1983). Chennai: Tamil Nadu Text Book Society